**<u>24.03.2026</u>**

**<u>அசல் வழக்கு எண். 45/2020</u>**

<u>பி.வா.சா.1 –</u> திரு. செல்வக்குமார்

**<u>சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.</u>**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

1. உங்கள் சொந்த ஊர் கோடவிளை என்றால் சரிதான். நீங்கள் சென்னையில் டிரைவராக பணியாற்றி வருகிறீர்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே சென்னையில் பணியாற்றி வருகிறீர்கள் என்றால் சரியல்ல.

2. 2003ல் நீங்கள் விருப்பட்டு காதல் திருமணம் செய்துக்கொண்டீர்கள் என்றால் சரிதான். 2003ற்கு பின் நிரந்தரமகா குடும்பத்துடன் சென்னையில் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். சென்னை முகவரியில்தான் உங்களுக்கு ஆதார் அட்டை , குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை உள்ளது என்றால் சரிதான்.

3. 2003ற்கு பிறகு ஊரில் நடக்கும் கோவில் அசன விழா மற்றும்திருமண விழாவிற்கு வந்து செல்வது வழக்கம் என்றால் எப்போதாவது வந்து செல்வேன். நீங்கள் சென்னைக்கு போவதற்குமுன்பு ஊரில் மாணிக்கம் கம்பெனியில் வேலை பார்த்தீர்கள் என்றால் சரியல்ல. விவி மினரல் நிறுவனத்தில் 4 வருடமாக 1999 முதல் 2001 வரை பணியாற்றினேன்.

4. உங்கள் தகப்பனார் பெயர் சுப்பையா நாடார் என்றால சரியல்ல. சுப்பையா நாடார் என்ற குணசேகரன். உங்கள் தாயார் பெயர் ராஜபூபதி என்றால சரிதான். உங்கள் பெற்றோர்கள் இருவரும் மாணிக்கம் கம்பெனியில் பணியாற்றி வந்தார்கள் எனாறல் சரிதான். தற்போது உங்கள் தகப்பனார் மட்டும் விவி மினரல் நிறுவனத்தில் காவலாளியாக பணியாற்றி வருகிறார் என்றால் சரியல்ல. ஆனால் அங்கு பணிபுரிந்து வந்தார். எப்போது இருந்து எப்போது வரை பணியாற்றினார் என சொல்ல இயலாது.

5. உங்கள் பெற்றோருக்கு நீங்கள் மற்றும் ராஜதுரை என்ற மகனும், அனிதா, வனிதா மதி என 2 பெண்மக்கள் உண்டு என்றால் சரிதான. வழக்கு 2ம் பிரதிவாதி அனிதாவின் கனவர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சார்லஸ் என்பவரின் குமாரா என்றால் சரிதான். சார்லஸ் தகப்பனார் பெயர் பால்பாண்டி என்றால் சரிதான். அவர் ஆசிரியராக பணியாற்றி காலம் சென்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.24 17:16:20 +0530

6. உங்கள் தாயாரின் இயற்கை அப்பா அம்மா பெயர் யார் என்றால் தகப்பனார் பெயர் திருமாள் நாடார், தாயார் பெயர் ஞாபகம் இல்லை. உங்கள் தாயார் ராஜபூபதியை ராசையா நாடாா என்பவர் தத்தெடுத்து வளர்த்து வந்தார் என்றால் சரிதான். ராசையா நடாரின் மனைவி பெயர் அன்னக்கிளி என்றால் சரிதான். அன்னக்கிளியின் தங்கை மகள்தான் உங்கள் தாயார் என்றால் சரிதான். ராசையா நாடாரின் தகப்பனார் பெயர் ஏசுவடியான் நாடார் என்றால் சரிதான்.. அவருக்கு ராசையா நடார், பால்பாண்டியன் என 2 ஆண்மக்களும், தவமணி, அன்னமனி அம்மாள், சொர்மணி அம்மாள் என 3 பெண்மக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. வழக்கு சொத்தின் சர்வே எண். 165/1பி என்றால் ஞாபகம் இல்லை. அதன் மொத்தவிஸ்தீரணம் 1 ஏக்கர் 12 சென்ட் என்றால் சரிதான். சர்வே எண். 165/1பி சொத்தும் வேறு சொத்துக்களும் ராசையா நாடாரின் தகப்பனார் ஏசுவடியான் நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால தெரியாது. வழக்கின் எதிருரைக்கும் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்வதற்கும் தகவல் கொடுத்தது யார் என்றால் நான்தான் கொடுத்தேன். முதல்விசாரணை வாக்குமூலததில் வழக்கு சொத்து ஏசுவடியான் நாடாருக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ளீர்கள் என்றால் அது பற்றி தெரியாது.

8. ஏசுவடியான் என்பவரின் மகள் சொர்ணக்கிளி அம்மாள் வாதியாக இருந்து உங்கள் மீதும் உங்கள் தயார் மீதும், ஏசுவடியானன் நடார் மக்கள் மீதும் கிரையம் பெற்ற நபர்கள் மீதும் திருநெல்வேலி சார்பு நீதிமன்றம் அவ.எண். 14/83 வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம்கேட்டு தாக்கல் செய்திருந்தார் என்றாலல் தெரியாது என் பாட்டி வழக்கு நடத்தினார்.

9. உங்கள் தாயார் தற்போது உங்கள் உடன் இருக்கிறாா என்றால் சரிதான். உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஏசுவடியான் நாடார் உயிருடன் இருந்த காலததில் அவர் சொத்துக்ள் பொறுத்து வாய்மொழியாக அவரது ஆண்மக்களான ராசையா நடார்மற்றும் பால்பாண்டி நாடாருக்கு பிரித்துக்கொடுத்தாக சொல்லியுள்ளீர்க்என்றும் அது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அந்த வாய்மொழி பாகம் எதன் அடிப்படையிலும் யார் சொல்லி தெரியும் என்றால் என் தாயார் சொல்லி தெரியும்.

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.24 17:16:24 +0530

10. வழக்கு சொத்தில் ராசையா நடார் ஏற்படுத்தி வைத்த உயிலின் அடிப்படையில் நீங்கள் உரிமை கோருகிறீர்கள் எனறால் சரிதான. வழக்கு சொத்து ராசையா நாடாருக்கு எவ்வாறு பாத்தியப்ட்டது என்று உயிலில் சொல்லப்படவில்லை என்றால தெரியாது. ராசையா நாடாருக்கு கையெழுத்து செய்ய தெரியும் என்றால் சரியல்ல கைரேகை தான் போடுவார்.

11. நீங்கள் தாக்கல் செய்த பி.வசாஆ1 உயில் ஆவணத்தில் தனக்கு கையெழுத்து போட தெரியும் என்றும் நடுக்கத்தால் கைரேகை வைப்பதாக சொல்லியுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அந்த உயில் ஆவணத்தில் ஏவடியான் நடார் அந்த சொத்தை வாய்மொழியாக ராசையா நாடாருக்கு கொடுத்தாக காட்டப்படவில்லை என்றால் தெரியாது.

12. பி.வசாஆ1 உயில் ஆவணத்திற்க முன் 1 ஏக்கர் 12 சென்ட் முழுவதற்கும் ராசையா நடாரின் பெயரில் வேறு ஆவணங்கள்இல்லை என்றால் சரிதான். உயில் ஆவணத்திற்கு பின்பு ராசையா நாடாரின் பெயருக்கு பட்டா இல்லை என்றால் தெரியாது. நீங்கள் 1 ஏக்கர் 12 சென்டில் மேல்புறம் பாதி சென்ட் 56ஐ பொறுத்து 19.9.2005ல் அரிச்சந்திரன் நாடார் என்பவரின் மகன் சுயம்பு என்வருக்கு பவர் கொடுத்தீர்கள் எனறால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் ஆவணம்தான் அந்த பவர் பத்திரம் என்றால் எனக்கு படிக்க தெரியாது. அந்த பவர் பத்திரத்தின் அசல் உங்கள் கைவசம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது என் தாயாருக்குதான் தெரியும். மேற்படி 56 சென்ட்டுககு நான்கு பக்க எல்கை விவரம் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் தெரியாது. அந்த பவர் பத்திரம் எழுத தகவல் கொடுத்து யார் என்றால் நான்தான் கொடுத்தேன்.

13. பவர் பத்திரத்தில் 56 சென்ட்டுக்கு கீழ் பக்கம் பாண்டி நாடார் இடம் காண்டிப்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. சுயம்பு நாடார் அந்த பவர் அடிப்படிடயில் 10.10.2007ல் வாசாஆ7 மூலம் முத்துக்குமார் என்பவருகளு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நீங்கள் கொடுத்த பவர் பத்திரத்தில் கிழக்கு எல்கையாக கையிருப்பு நிலம் காட்ப்படவில்லை என்றால் சரிதான். நீங்களும் உங்கள் மைத்துனரும் சேர்ந்துதான் மோசடியாக கிழக்கு பக்கம் உள்ள வழக்கு சொத்தை பிவசாஆ. 3 மூலம் உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.24 17:16:29 +0530

கீழ்பக்கம்ம 56 சென்ட் நிலத்தை ராசையா நாடாரின் சகோதரர் பாலபாண்டி என்பவர் அனுபவம் செய்து வந்தார்ள ன்றால சரியல்ல.

14. பால்பாண்டி நடார் அனுபவம் செய்து ந்த சொத்தைதான் 21.1.1974 ல் வாசாஆ 1 மூலம் தங்கத்துரை என்பவருககு கிரையம் கொடுத்துள்ளார்ள ன்றால் தெரியாது. ஏசுவடியான் நடார் மகள் சொர்மணியம்மாள் தாக்கல் செய்த அவஎண். 14/83 ல் தங்கத்துரை என்பவரும் ஒரு தரப்பனர் என்றால் தெரியாது. அந்த வழக்கில் வாசாஆ.3 உயில் நிரூபிக்கப்படவில்லைஎ ன்ற உறுதி செய்தது என்றால் தெரியாது. அந்த உயிலின்அடிப்படையில் ராஜபூவதி என்பவருக்கு பிறந்த நீங்களும் உங்களுக்கு பிறகு பிறக்கும் ஆண் வாரிசுகளுக்கும் சம பாகம் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது குறித்து இந்த வழக்கிலோ, நீங்கள் தாக்கல் செய்த அவஎண். 2/20 வழக்கிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

15. உங்கள் தாத்தா ராசையா நடார் 1 ஏக்கர் 12 சென்டில் பிரிவின்றி பாதி சொத்தை பொறுத்துதான் வசாஆ 4 மூலம் முத்துவேல் நடார் என்பவருககு அடமானம் செய்துக்கொடுத்துள்ளார்ள ன்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் மைத்துனர் 2019 அக்டோபர் மாதத்தில முதன்முதலாக வாதியின் அனுபவத்தை இடையூறு செய்தார் என்றால் சரியல்ல. வாதி உங்கள் மீதும் உங்கள் மைத்துனர் கிறிஸ்துராஜா மீதும் மாவட்ட கண்காணிப்பளார் திருநெல்வேலி அவர்களிடம் புகார் கொடுத்தார் என்றும் அது 2019 ம் வருடம் டிசம்பவர் மாதம் என்றால் சரிதான்.

16. அந்த விசாரணையில் இருந்து தப்பிக்க வேண்டி ராதாபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்ர அவஎண். 2/20 என்ற வழக்கை தாக்கல் செய்தீர்கள் எனறால் சரிதான். நீங்கள் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததால் மாவட்ட கண்காணிப்பு அலுவலகததில் நீதிமன்றம்மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். பின்னர்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்தபின்னு ராதாபுரம் உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு எண். 2/20 உங்கள் வருகையின் தவறுகை காரணமாக தள்ளுபடிஆகிவிட்டது என்றால் தெரியாது.

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.24 17:16:34 +0530

17. கீப்பாதி 56 சென்ட்இடத்தில் உங்கள் தாத்தா ராசையா நாடாருரக்கு எந்தவித உரிமையும் அனுபவம் கிடையா என்றும்அ வர் அந்தசொத்தையும்சேர்த்து உயில் பத்திரம் எழுதி வைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்த பி.வசாஆ.1 உயில் உங்கள் தாத்தாவால் எழுதப்பட்டது அல்ல என்றும் அது மோசடியானது என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 4 தினங்களில் அவர் காலம் சென்றுவிட்டார்ள ன்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் நீஙகளும் கீழ்பாதி சொத்தை அனுபவம் செய்தது இல்லை என்றும் உங்களுக்கு 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றும் அது சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

18. கீழ்பாதி சொத்தை பொறுத்து ஏசுவடியான் நாடாரால் பால்பாண்டியன் என்பவருக்கு கொடுக்கப்பட்டது என்றும் அவ் அனுபவம் செய்து வந்து தங்கத்துரை என்பருக்கு கிரையம் கொடுத்து அவர் அனபவம்செயய் து வந்து சாமுவேல் ஆசிரியருக்கு கிரையம் கொடுத்து அவர் அனுபவம் செய்து வந்து அவரது மகள்களிடமிந்து வாதிகிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

19. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதியின் அனுபவத்தல் உள்ளது என்றும் வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும் உங்கள் பெயருக்கு ஏற்பட்ட பட்டா முறையாக விசாரிக்காமல் கொடுக்கப்பட்டது என்றும் அதன்அடிப்படையில் உரிமை கோர உங்களுக்கு சட்ட அறுகதைஇல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.24 17:16:38 +0530